பக்கங்கள் 14 + 2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 04 திங்கட்கிழமை 21.10.2024 | அதிர்வு 81

## இரு இளைஞர்கள் நீரில் மூழ்கிப் பலி!



நீரில் மூழ்கி இரண்டு இளைஞர்கள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

கஹட்டகஸ்திகிலிய, இஹல 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

# ரவி செனவிரத்னவை உடன் பதவி நீக்குக!

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணை அறிக்கையை வெளியிட்டு உதய கம்மன்பில வலியுறுத்து

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்னவை உடன் பதவி நீக்கம் செய்யுமாறு பிவிதுரு ஹெலவுருமயவின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில வலியுறுத்தினார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நியமிக்கப்பட்ட ‘ஏ.என்.ஜே. தி அல்விஸ்’ ஜனாதிபதி விசாரணைக் குழுவின் அறிக்கையை, கம்மன்பில இன்று வெளியிட்டார். இது தொடர்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அத்துடன், இரண்டாவது அறிக்கையை 02▶

## தனியார் வகுப்புக்குச் செல்வதாகக் கூறிவிட்டு வீட்டை விட்டுச் சென்ற மாணவி சடலமாக மீட்பு

(ராமு தனராஜா)

தனியார் வகுப்புக்குச் செல்வதாகக் கூறிவிட்டு வீட்டை விட்டுச் சென்ற 17 வயதுடைய இரண்டு மாணவிகளில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மஹியங்கனை, லொக்கலோ ஓயாவில் இருந்து இன்று திங்கட்கிழமை காலை சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி மாணவியுடன் சென்ற மற்றைய மாணவி தற்போது ரிதிமாலியத்த பொலிஸ் நிலையத்தில் பொலிஸா 02▶



# 400 பைல்கள் மீளத் திறப்பு! கைதாகும்போது புலம்பாதீர்!!

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

“400 கோப்புகள் வரை மூடப்பட்டுள் ளன. அவை தொடர்பான விசாரணை களைத் துரிதப்படுத்தி, வழக்குத் தொடுப் பதற்குரிய ஏற்பாடுகளை முன்னெ டுக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங் களுக்கு ஆலோசனை வழங்கப்பட் டுள்ளது. எனவே, கள்வர்களை நிச்சயம் பிடிப்போம்.” – என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

“கள்வர்களைப் பிடித்தீர்களா எனக் கேட்கின்றனர்? நிச்சயம் பிடிப்போம். அவ்வாறு பிடிக்கும்போது புலம்ப மட்டும் வேண்டாம் எனக் கூறிவைக்க விரும் புகின்றேன்.

சுமார் 400 கோப்புகள் வரை உள் ளன. அவை அனைத்தும் மூடப்பட்டுள்



ளன. இது தொடர்பில் நாம் பரிசீலித் தோம். சில கோப்புகள் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இறுகியுள்ளன.

மேலும் சில கோப்புகள் சிஐ.டியில் தேங்கியுள்ளன. இலஞ்ச, ஊழல் விசா ரணை ஆணைக்குழுவிலும் கோப்புகள் ஸ்தம்பித்துள்ளன. மேலும், சில விட யங்கள் இன்னமும் முறைப்பாடு மட்டத்தில் மட்டுமே உள்ளது.

அனைத்து கோப்புகளையும் மீளத் திறக்குமாறு (விசாரணை நடத்துமாறு) சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளோம். அத் துடன், வழக்குத் தொடுப்பதற்கு ஏற்பு டைய வகையில் விசாரணையில் விவ ரங்களைத் திரட்டுமாறு அறிவுறுத்தப்பட் டுள்ளது.

நல்லாட்சியின்போது ஊழல்வாதிகள் மற்றும் மோசடியாளர்களுக்கு எதிரான வழக்கு விசாரணை, கண்காட்சியாகவே முன்னெடுக்கப்பட்டது. எமது ஆட்சியில் அவ்வாறு நடக்காது. உரிய வகையில் விசாரணை நடத்தப்படும். தரவுகள் உரிய வகையில் திறப்பட்டு, சட்டத்தின் முன் தண்டனை கிடைக்கும் வகையில் வழக்குத் தொடுக்கப்படும்.” – என்றார்.

# பற்றைக்காட்டுக்குள் சொகுசு கார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், தெல்லிப்பளை பகுதியில் பற்றைக்கா டொன்றில் இருந்து சொகுசு கார் ஒன்று பொலிஸாரினால் மீட்கப்பட்டது.

பற்றைக்காடு ஒன்றினுள் சொகுசு கார் ஒன்று மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் காரை மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

பொலிஸ் நிலையத்தில் காரின் இலக்கத்தகட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த வேளை, அது போலியானது எனத் தெரியவந்துள்ளது. அத்துடன் காரில் இருந்த ஆவணங்களும் போலியானவை என்பது தெரியவந்துள்ளது.



இது குற்றச் செயல்களுடன் தொடர்புடைய காராக இருக் காமல் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கார் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலி ஸார் முன்னெடுத்துள்ளனர்.

### இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கங்ஹிடிகம ஏரியில் நீராடச் சென்ற நான்கு இளைஞர்களில் இருவரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை நான்கு இளைஞர்களும் மது அருந்தி விட்டு இஹல கங்ஹிடிகம ஏரியில் நீராடியுள்ளனர். இதன்போது இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந் துள்ளது.

உயிரிழந்தவர்கள் 24 மற்றும் 34 வயதுடையவர்கள் எனவும், இருவரும் பொல்கஹவெல மற்றும் புஜாபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக கஹட்டகஸ்திகிலிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை கஹட்ட கஸ்திகிலிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த இரண்டு மாணவிகளும் ஒரே பாடசாலையில் படிக்கும் நண்பிகள் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணை களில் தெரியவந்துள்ளது.

பதுளை நகரில் உள்ள தனியார் வகுப்புக்குச் செல்வதாகக் கூறிவிட்டு, நேற்று ஞாயிற்றுக்கிழமை காலையிே லயே வீட்டிலிருந்து சென்ற மேற்படி இரண்டு மாணவிகளும் வீடு திரும்பாத தால் அவர்களின் பெற்றோர்கள் பதுளை பொலிஸில் முறைப்பாடு செய்திருந்த னர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பதுளை பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### ரவி செனவிரத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த வாரம் திங்கட்கிழமை வெளியி டுவேன் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

‘ஏ.என்.ஜே. தி அல்விஸ்’ அறிக்கை யில், தற்போதைய பொதுமக்கள் பாது காப்பு அமைச்சின் செயலாளர் ரவி சென விரத்னவுக்கு எதிராக பாரிய குற்றச்சாட் டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய ரவி செனவிரத்னவைப் பதவியில் இருந்து நீக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் பொலிஸ் அதிகாரிகளிடம் நீதியை எதிர்பார்க்க முடியாது. முக்கியமாக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர் களுக்கு நீதி கிடைக்காது.” – என்றார்.





# யாழ். போதனாவில் இந்திய இராணுவத்தால் படுகொலையானவர்களின் நினைவேந்தல்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையினுள் அத்துமீறி உள்நுழைந்த இந்திய இராணுவத்தினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட 68 பேரின் நினைவேந்தல் நிகழ்வு இன்று திங்கட் கிழமை யாழ். போதனா வைத்திய சாலையில் அனுஷ் டிக்கப்பட்டது.

கடந்த 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ஆம், 22ஆம் திகதிகளில் யாழ். போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி உள்நுழைந்த இந்திய இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.



அந்தத் தாக்குதல் சம்பவத்தில் வைத்தியசாலையில் கடமையில் இருந்த மூன்று மருத்துவர்கள், இரண்டு தாதியர்கள், மேற்பார்வையாளர் உள்ளிட்ட 21 மருத்துவ சேவையாளர்கள் மற்றும் சிகிச்சை பெற்று வந்த 47 நோயாளர்கள் என 68 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.




















# துணைவேந்தர் சுற்றுக்கேடயப் போட்டியில் வெற்றி பெற்றது யூ.ஓ.ஜே. வாரியர்ஸ் அணி

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சுற்றுக் கேடயத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்களைக்கொண்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை பதில் துணைவேந்தரும் கலைப் பீடாதிபதியுமான பேராசிரியர் சி.ரகுராம் தலைமையில் நடைபெற்றது.

இதில் யாழ். பல்கலைக்கழகத் துடுப்பாட்ட அணியின் முன்னாள் தலைவரும் தாவரவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் இ.கபிலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்தச் சுற்றுப் போட்டியின் மூன்றாவது இடத்தை யூ.ஓ.ஜே. ஈகிள்ஸ் அணியும், இரண்டாவது இடத்தை யூ.ஓ.ஜே. ரைற்றன்ஸ் அணியும் பெற்றுக்கொண்டன. யூ.ஓ.ஜே. வாரியர்ஸ் அணி முதலாமிடத்தைப் பெற்று சுற்றுக் கேடயத்தைத் தனதாக்கிக் கொண்டது.

















# மன்னார் கட்டுக்கரைக் குளத்தின் கீழ் 31 ஆயிரத்து 339 ஏக்கர் பெரும்போகம்



(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் கட்டுக்கரை குளத்தின் கீழ் வருகின்ற வயல் நிலங்களுக்கான பெரும்போக பயிர்ச் செய்கைக்கான 2024-2025 கூட்டம் உயிலங்குளத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற குறித்த கலந்துரையாடலில், பிரதேச செயலாளர்கள் அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது விவசாய குழு,அதனுடன் இணைந்த 30 விவசாய அமைப்புகள் அழைக்கப்பட்டு குறித்த கூட்டம் இடம் பெற்றது.

இதன் போது விவசாயத்துடன் தொடர்புடைய திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இதன் போது முன்வைக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக பயிர்ச் செய்கைக்கு உத்தேசிக்கப்பட்ட நிலப்பரப்பாக இவ்வருடம் 31 ஆயிரத்து 339 ஏக்கர் நிலம் இம்முறை பெரும்போக நெற்செய்கைக்காகப் பயன்படுத்தப்பட உள்ளது என்று தீர்மானிக்கப்பட்டது.

அதற்கு அமைவாக இவ்வருட பெரும்போக விவசாய தயார் படுத்தலுக்காக எதிர்வரும் 27ஆம் திகதி முதலாவது நீர் விநியோகம் செய்யப்பட உள்ளது.

விதைப்பு இறுதித் திகதியாக நவம்பர் 04 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. நான்கரை மாத நெற்களுக்கான விதைப்பை நவம்பர் 7 ஆம் திகதிக்கு முன்பாகவும், 3 தொடக்கம் மூன்றரை மாத நெல்லினங்களை நவம்பர் 26 ஆம் திகதிக்கு முன்பாகவும் இரண்டரை மாத நெல்லினத்தை விதைக்க விரும்புபவர்கள் நவம்பர் மாதம் 26 ஆம் திகதிக்கு முன்பாகவும் விதைப்பை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

நவம்பர் 27 ஆம் திகதி தொடக்கம் கட்டுக்கரை குளத்தின் கீழ் விவசாயம் செய்வோர் தேவைப்படுகிறவர்களுக்கு நீர் விநியோகம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதே போன்று 2025 மார்ச் 11 ஆம் திகதி அறுவடை ஆரம்பிக்கப்பட வேண் டும் என்னும் தீர்மானமும் எடுக்கப் பட்டுள்ளது.

பெரும்போக நெற் செய்கையை கருத்தில் கொண்டு கால் நடைகளை கட்டுப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 22-04-2025 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் பெரும்போக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் பகுதிக்குள் கால்நடைகளை விட வேண்டாம் என்று கால்நடை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# கல்முனையில் மக்கள் சந்திப்பில் வேட்பாளர் ரஹ்மத் மன்சூர்!





(கல்முனை நிருபர்)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பாக திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் முன்னாள் கல்முனை மாநகர பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர் கல்முனை கடற்கரை பள்ளிவாசல் அருகில் மக்கள் சந்திப்பில் நேற்று (20) ஈடுபட்டார்.

இதன் போது பொது மக்களுடன் சினேக பூர்வமாகக் கலந்துரையாடலை மேற்கொண்டார் .

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உள்ளூராட்சித் தேர்தல் சிக்கல்

நாடாளுமன்றத் தேர்தல் நிறைவடைந்து 35 முதல் 40 நாள்களுக்குள் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதுதான் நிலைமை என்றால் இந்த ஆண்டு இறுதிக்குள்ளேயே உள்ளூராட்சி தேர்தலும் நடந்து முடிந்து விடும்.

தேர்தல் ஆணையாளர் நாயகத்தின் இந்தக் கருத்துப்படி உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதாயின் அது ஆண்டு இறுதியில் கிறிஸ்மஸ் விடுமுறையை ஒட்டிய காலத்தில் நடத்தப்பட வேண்டி இருக்கும். அது சாத்தியமா என்பது தெரியவில்லை.

நவம்பர் 14ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறுகின்றது. அது நிறைவடைவது பெரும்பாலும் நவம்பர் 18ஆம் திகதியாகும் என்று கணக்கிட முடியும். தேர்தல் முடிவுகளை உத்தியோகபூர்வமாக வெளியிட்டு முடிக்க, வாக்களிப்பு முடிந்து குறைந்தது இரண்டு, மூன்று நாள்கள் தேவைப்படலாம்.

அதன் பின்னர் 35 முதல் 40 நாள்கள் என்று தேர்தல் ஆணையாளர் நாயகம் சொல்லும் கணக்குப் படி பார்த்தால் டிசம்பர் கிறிஸ்மஸ் விடுமுறையில் அல்லது அது தாண்டி புதிய ஆண்டு பிறந்து தைப்பொங்கலுக்கு முன்னர், இப்போது நிலுவையாக இருக்கும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடித்தாக வேண்டும்.

நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் இந்தத் தேர்தலை இயன்ற விரைவில் ஏனைய தேர்தல்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் தேர்தல் ஆணையம் நடத்த வேண்டும்.

அப்படிப் பார்த்தால் பொதுத் தேர்தல் முடிந்த கையோடு இயன்ற விரைவில் அதைத் தேர்தல் ஆணையம் நடத்த வேண்டும்.

ஏற்கனவே 2023 முற்பகுதியில் இந்தத் தேர்தலை ஒட்டிய வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டன. பகுதி அளவிலான வாக்குச் சீட்டுகளும் அச்சிடப்பட்டு முடிந்துள்ளன. இந்தச் சூழலில் அடுத்த 35 முதல் 40 நாள்களுக்குள் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் என்ற தேர்தல் ஆணையாளர் நாயகத்தின் கணக்கு சட்டப்படி சரியானது.

அந்த உள்ளூராட்சி தேர்தலுக்கான மீள் அறிவிப்பு வழங்கப்பட்டு, வேட்பாளர்கள் பிரசாரம் செய்வதற்கான காலக் கெடுவும், ஏனைய நடவடிக்கைகளுக்கான கால அவகாசமும் வழங்கப்பட்டால் போதுமானது.

ஆனால் சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஏற்கப்பட்ட வேட்பு மனுக்களின் அடிப்படையில் இப்போது தேர்தலை நடத்துவது பொருத்தமானதா என்ற கேள்வி எழுகிறது.

வேட்பாளர்கள் மாறிவிட்டார்கள். அரசியல் கட்சிகள், அணிகள், தரப்புக்கள், கூட்டுகள் மாறிவிட்டன. தலைகீழாகி விட்டன. முன்னர் ஒன்றாக இருந்த தரப்புக்கள் இப்போது எதிரெதிர் அணியில். ஜனாதிபதித் தேர்தலையும் நாடாளுமன்றத் தேர்தலையும் சந்தித்துள்ள சூழ்நிலையில் புதிய கூட்டுக்களும் உருவாகி இருக்கின்றன. இந்தப் பின்புலத்தில் பழைய - முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட - வேட்பு மனுக்களின் அடிப்படையில் இந்த உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது என்பது பெரும் அரசியல் குழப்பங்களை ஏற்படுத்தக் கூடியது.

ஆயினும், நிலுவையில் இருக்கும் 'உள்ளூராட்சித் தேர்தல் - 2023' ஐ விரைவில் நடத்தி முடிக்குமாறு உயர் நீதிமன்றம் அளித்திருக்கும் தீர்ப்புக்கு தேர்தல் ஆணையம் கட்டுப்பட்டது. இது விடயத்தில் அதற்கு மாறான, சுயாதீனமான வேறு எந்த முடிவையும் எடுக் கக்கூடிய அதிகாரம் தேர்தல் ஆணையத் துக்கு இல்லை - இடைநிறுத்தப்பட்ட தேர்தலை தொடர்ந்து முன்னெடுப்பதை தவிர.

வரும் நவம்பர் 21ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் கூடுவதற்கான நாள் நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும் கூட, அந்த நாடாளுமன்றம் கூடி, அடுத்த ஒரு மாதத்துக்குள் நடக்க இருக்கும் உள்ளூராட்சித் தேர்தலை பழைய வேட்பு மனுக்களைத் தவிர்த்து, புதிதாக வேட்பு மனுக்களை ஏற்றுக்கொண்டு நடத்துவதற்கான சட்ட திருத்தங்கள் எதையும் கொண்டு வருவதற்கு அந்த நாடாளுமன்றத்திற்கு உரிய கால அவகாசம் இருக்கப் போவதில்லை.

ஆகையினால் இரண்டு வருடங்களுக்கு முந்திய வேட்பு மனுக்களின் அடிப்படையில் தேர்தலை நடத்துவதைத் தடை செய்து, மீண்டும் புதிதாக வேட்பு மனுக்களை ஏற்று, தேர்தலை நடத்துமாறு தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் எனக் கோரி உயர் நீதிமன்றத்திடம் விண்ணப்பிப்பதுதான் இந்த நெருக்கடியில் இருந்து வெளியே வருவதற்கு ஒரே வழி ஆகும்.





# பருவப் பெயர்ச்சி கால அனர்த்தங்களை குறைப்பது தொடர்பில் கலந்துரையாடல்!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழு கூட்டம் வெள்ளிக்கிழமை (18) மாலை மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட அனைத்து முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கே. திலீபன் மற்றும் முப்படையினர், திணைக்கள தலைவர்கள், உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் மாவட்டத்தில் பருவப் பெயர்ச்சி காலத்தில் ஏற்பட உள்ள அனர்த்தங்களை குறைப்பது தொடர்பாகவும், அதனை எவ்வாறு கட்டுப்படுத்துவது, அனர்த்தம் ஏற்பட்டால் எவ்வாறு தடுப்பது என்பது குறித்து கலந்துரையாடப்பட்டது.

இதன் போது மன்னார் மாவட்டம் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகின்ற போது இயற்கை அனர்த்தங்களின் போது பாதிப்புக்கு உள்ளாகும் ஓர் பகுதியாக காணப்படுவதன் காரணமாக அதை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

நீர்ப்பாசன திணைக்களம், பிரதான குளங்களில் நீர் அதிகமாக பெருக்கெடுக்கும் போது ஏற்படுகின்ற ஆபத்துக்களை குறைப்பது சம்மந்தமாகவும்,மாகாண சபைக்கு சொந்தமான நீர்ப்பாசன குளம், ஆறுகளில் திடீரென ஏற்படுகின்ற வெள்ள நிலையை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் 165 இற்கும் மேற்பட்ட குளங்கள் கமநல அபிவிருத்தி திணைக்களங்களுக்குள் காணப்படுகின்றன.

அந்த குளங்களில் ஏற்படுகின்ற வெள்ள நிலைமையை கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் குறித்த கலந்துரையாடலில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் வெள்ள நிலைமையின் போது மக்கள் இடம் பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்குவதற்கு 30 இற்கும் மேற்பட்ட தற்காலிக பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட உள்ளது.

அவ்வாறான பாதுகாப்பு நிலையங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய ஏற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதை விட மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ள நிலைமை ஏற்படும் போது அதைக் கடலுக்கு வெளியேற்றும் சந்தர்ப்பங்களில் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. வெள்ளை நீரை கடலுக்குள் செலுத்துவது தொடர்பாகவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

# இளைஞர்களுடன் இணைந்து மாற்றத்தை ஏற்படுத்துவேன்!

## வேட்பாளர் டினேஸ் தெரிவிப்பு



(வாஸ் கூஞ்ஞ)

வன்னியில் இளைஞர்களுடன் இணைந்து மக்களுக்கு ஏற்றவாறு ஒரு மாற்றத்தை எற்படுத்த வேண்டும்.

இவ்வாறு வன்னித் தேர்தல் தொகுதியில் இலங்கை தமிழரசுக் கட்சி சார்பாக வீட்டுச் சின்னத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் களம் இறங்கியிருக்கும் இளம் சட்டத்தரணி செல்வராஜ் டினேசன் தெரிவித்தார்.

மன்னாரில் ஒரு தனியார் விடுதி மண்டபத்தில் நாடாளுமன்ற தேர்தல் தொடர்பாக இளைஞர்களுடனான ஒன்று கூடலில் டினேசன் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் வன்னியின் மாற்றம் என்ற தொனிப் பொருளில் இளைஞர்களும் இந்த தேர்தலில் இணைய வேண்டும் என்ற ஒரு சிந்தனையில் நாம் முகம் கொடுக்கின்றோம்.

ஆரசியலில் இளைஞர்கள் எவ்வாறு பங்களிக்க வேண்டும் என்ற ஒரு சிந்தனையில் நாம் இங்கு ஒருமித்து கூடியிருக்கின்றோம்.

தற்பொழுது மன்னாரில் இன்று இவ்வளவு இளைஞர்கள் கூடியிருப்பது, கடந்த காலத்தில் இவ்வளவு இளைஞர்கள் தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்ததை நான் காணவில்லை.

ஆனால் இன்று இங்கு நோக்கும் போது இப்பொழுது இந்த இளைஞர்கள் தொடர்ந்து என்னுடன் பயணிப்பார்கள் என்பது ஐயமில்லை.

பல இடங்களிலிருந்தும் இந்த இடத்துக்கு வருகை தந்துள்ளீர்கள். நாம் எமக்குள் ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

வன்னி தேர்தல் தொகுதியானது ஒரு பரந்த இடம். மன்னார் , வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைக் கொண்டதே வன்னித் தேர்தல் தொகுதியாகும்.

தேர்தலுக்கு குறுகிய நாள்களே காணப்படுவதால் நான் ஒவ்வொருவரதும் வீடுகளுக்கு செல்ல முடியாத ஒரு நிலை இருக்கின்றது. நான் எனது சட்டத் தொழிலையும் இடைநிறுத்தி இயன்றளவு உங்கள் ஒவ்வொருவரையும் தேடி வருவதில் என்னை ஈடுபடுத்தி வருகின்றேன்.

நான் தேர்தலுக்கு வரும்பொழுது எவரிடமும் பணத்தை எதிர்பார்த்து வரவில்லை. ஆனால் மக்களாகிய உங்களை நம்பியே நான் இதில் என்னை அர்ப்பணித்துள்ளேன்.

எனது கரங்கள் கறைபடிந்த கரங்கள் அல்ல. மாறாக மக்களுக்கு உதவிகள் செய்த கரங்கள். நீங்கள் எனக்கு அழைப்பு விடும்பட்சத்தில் நான் அந்த இடத்துக்கு வருகை தருவேன்.- என்றார்.





# வேட்பாளர் றிஸ்லி முஸ்தபாவை ஆதரித்து அம்பாறையில் கருத்தரங்கு

(பாறுக் ஷிஹான்)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளருமான றிஸ்லி முஸ்தபாவை ஆதரித்து ஆண், பெண்களுக்கான தெளிவூட்டல் கருத்தரங்கு அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, இறக்காமம், நற்பிட்டிமுனை, பகுதிகளில் பிரச்சார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன் போது நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு சந்திகள், கல்முனை சந்தை நகர வர்த்தக நிலையங்களுக்கு சென்ற நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளர் றிஸ்லி முஸ்தபா தனக்கு ஆதரவை வழங்குமாறு பொது மக்கள், வர்த்தகர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அரசியல்வாதிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக மக்களின் வாக்கு பலத்தால் தெரிவு செய்யபட்ட பின்னர் தங்களின் கடமைகளை நேர்மையாகச் செய்வதில்லை. இந்த பிழையான போக்கை மாற்ற என்னால் முடிந்தளவு போராடுவதுடன் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி, மற்றும் அமைச்சர் பதவிகளுக்கான வரப்பிரசாத வாய்ப்புக்களை முழுவதுமாக பெற்றுக்கொண்டு, தாம் சார்ந்த சமூகத்தினுடைய பிரச்சினைகள் என்னவென்று அறிந்திருந்தும், அவற்றுக்கு உரிய தீர்வைக் காண எந்தவித ஆக்கபூர்வ நடவடிக்கையும் எடுக்காததன் விளைவுதான் இன்று நான் இத் தேர்தலில் போட்டி யிடக் காரணம் என றிஸ்லி முஸ்தபா தெரிவித்தார்.

அத்துடன் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலிலும் இதே நிலைமைதான் ஏற்படபோகின்றது என நினைக்கிறேன். அரசியல்வாதிகள் மீது வெறுப்படைந்த மக்கள் மாற்றத்தையும், ஊழலற்ற அரசியலையும் எதிர்பார்த்தே 'தேசிய மக்கள் சக்தியை' ஆட்சியில் அமர்த்தி உள்ளார்கள். இதன் மூலம் நாட்டிலே ஒரு புதிய அரசியல் கலாசாரம் உருவாகும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது. அந்த நம்பிக்கைக்கு ஏற்றால் போல் நானும் செயற்பட நினைப்பதோடு, எதிர்கால அரசியல் பயணத்தை நான் சார்ந்த சமூகத்துடன் இணைந்து செம்மையாகவும் உண்மையாகவும் நடத்த உத்தேசித்துள்ளேன்.– என்றார்.



குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# ஒற்றுமையற்ற கட்சிகள் இருக்கும் வரைக்கும் அம்பாறை பிரதிநிதித்துவம் கேள்விக்குறியே!

## நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் காட்டம்

பல மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் அம்பாறை மாவட்டத்தை ஒரு இடைத்தங்கல் முகாமாக பயன்படுத்துகின்றனர் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் தெரிவித்தார்.

திருக்கோவில் பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் எல்லா பக்கத்திலும் அடிவாங்கும் தவில் போன்று தற்போதைய சமகால அரசியல் ரீதியாக பாதிப்படைந்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் சமகால அரசியல் போக்கானது மக்கள் கருத்து இல்லாமல் அரசியல் கட்சிகள் தாமாக சிந்தித்து செயற்படுகின்றது.

ஆரம்பத்தில் தேர்தல் கேட்பது என்றால் பிரதேச புத்திஜீவிகள், அதிபர்கள், இளைஞர்கள், ஆலய அறங்காவலர்கள் என மக்களின் கருத்து கேட்டதன் பின்னரே வேட்பாளர்கள் அரசியல் கட்சிகளில் நியமிக்கப்படுவர்.

ஆனால், இப்போது யார் வேண்டுமானாலும் தேர்தல் கேட்கலாம் என்று புதிய கோட்பாடு அம்பாறை மாவட்டத்தை பெறுத்த மட்டில் உருவாகியுள்ளது.

இதனால் மக்களுக்கு யார் வேட்பாளர் என்றே தெரியாத நிலைப்பாடு




காணப்படுகின்றது .

இது அம்பாறை மாவட்டத்தின் பிரதிநிதித்துவம் தொடர்பில் ஆரோக்கியமான செயற்பாடு அல்ல.

தேர்தல் காலத்தில் மாத்திரமே அரசியல் கட்சிகளின் வரவு அம்பாறை மாவட்டத்தில் காணப்படுகின்றது தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒரு வேட்பாளரை முன் நிறுத்தி குறித்த வேட்பாளருக்கு களம் அமைத்து வெற்றி பெற வைக்க வேண்டும்.

எல்லோரும் வேட்பாளர் ஆகலாம் என்ற கலாச்சாரம் ஒன்று தற்போது உருவாகியுள்ளது. பணம் இருப்பவர்கள் எல்லாம் வேட்பாளர்கள் என்ற நிலை அரசியல் ரீதியில் ஆரோக்யமானது அல்ல.

தமிழரசுக் கட்சி, சங்கு , மங்கு என பல கட்சிகள் வந்து கொண்டு கதைக்கும் விடயம் தமிழ் மக்களுக்கு பிரதிநிதி தேவை இவர்களே பிரிந்து காணப்படும் நிலையில் பிரதிநிதித்துவத்தை எவ்வாறு பாதுகாப்பது?

அம்பாறை மாவட்ட தமிழர் தொகுதிகள் அரசியல் கட்சிகளுக்கு ஒரு இடைத்தங்கல் முகாம் யாழ்., மட்டக்களப்பில் இருந்து வந்து மக்கள் கருத்தை கேட்காமல் வேட்பாளர்கள் பட்டியலை தயார் செய்து வாக்குகளை சக்கையாக்குகின்றனர்.

வெளி மாவட்டத்தில் இருந்து இங்கு வந்து வாக்கு கேட்கலாம். அம்பாறை தமிழ் மக்களின் வாக்கு தேவை. அனால் வேட்பாளர் தொடர்பிலான மக்கள் கருத்தைக் கேட்கமாட்டார்கள்.

மிக முக்கியமாக அடிமட்டத்தில் இருந்து அரசியல் செய்ய ஆசை இல்லை. போனால் நேரடியாக எம்.பி., பிரதேச சபை , மாகாணசபை என்று படிப்படியாக செல்லும் போக்கும் தற்போது அம்பாறை மாவட்டத்தில் காணப்படுகின்றது.

கடந்த காலத்தில் ஏற்பட்ட தொய்வு நிலையை வைத்து எதிர்காலத்தில் செயற்பட வேண்டும். ஆனால் கடந்த காலத்தை சிந்தித்து இம் முறை யாரும் செயற்படவில்லை. தன்னிச்சையாக செயற்படுகின்றனர்.– என்றார்.

# சாபக்கேடாக இருக்கும் அரசியலுக்கு முடிவு கட்டுவதே எனது நோக்கம்!

## தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் ரவீந்திர சேனாரத்ன

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

75 வருடங்கள் சாபக்கேடாக இருக்கும் அரசியலுக்கு முடிவு கட்டவே தேசிய மக்கள் சக்தியின் மேடையில் ஏறினேன்.

தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் ரவீந்திர சேனாரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது,

மலையத்தின் 75 வருடங்கள் சாபக்கேடாக இருந்த அரசியலுக்கு முடிவு கட்டவே தேசிய மக்கள் சக்தியின் மேடைக்கு ஏறினோம்.

15வருடங்களுக்குப் பிறகு நான் பொகவந்தலாவ பிரதேசத்துக்கு வந்துள்ளேன். அதில் இந்தப் பகுதியில் நீண்ட வருடங்களுக்கு பிறகு ஒரு எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. பொகவந்தலாவ வீதி ஓரளவு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

மலையக பெருந்தோட்ட மக்கள் கஷ்டப்பட்டு தேயிலைக் கொழுந்து பறிக்கும் தொழிலில் ஈடுபட்டு டொடலர்களை இலங்கை நாட்டுக்கு கொண்டு வந்து வழங்குகின்றனர்.



இந்த நாட்டில் அனைத்து மக்களும் சமமாக வாழவேண்டும் என்ற வேலைத் திட்டத்தை எமது ஜனாதிபதி ஆரம்பித்துள்ளார். மக்களின் வரிப்பணத்தில் பத்து பதினைந்து வாகனங்களைப் பயன்படுத்திக் கொண்டு எரிப்பொருள்களை வீன் வீரயம் செய்யும் அரசியல் வாதிகளே மலையகத்தில் இருக்கிறார்கள். ஆனால் மலையகத்துக்கு இதுவரை காலமும் செய்தது ஒன்று மில்லை.

பொகவந்தலாவ பகுதியில் பல்வேறு வசதிகளை கொண்ட வைத்தியசாலை ஒன்று கூட இல்லை. தீடிரென ஒருவருக்கு நோய் எடுபடும் போது அந்த நபரின் உயிரை காப்பாற்றுவதற்கு கூட வசதிகள் இல்லாத வைத்தியசாலைகளே கானப்படுகிறது.

மலையகத்தில் உள்ளவர்களை வைத்து கொண்டு ஒன்று தேயிலை கொழுந்து பறிப்பதற்கும் அல்லது கொழும்பு பகுதியில் யாராவது வீட்டில் தொழில்புரிவதற்கு மாத்திரமே பயன் படுத்துகின்றனர் .

75 வருட காலமாக நீங்கள் வாக்களித்த தலைவர்கள் குறைந்த பட்சம், உங்களது பிறப்பு சான்றிதழ்களில் குறிப்பிடப்பட்டுள்ள இந்திய தமிழ் என் பதை இலங்கை தமிழ் என மாற்றியமைப்பதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளனரா.

நீங்கள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் கடந்துள்ளன. கொழும்பு கண்டி போன்ற பகுதிகளில் வாழும் மக்களுக்கு கிடைக்கும் சம உரிமைகள் இந்த நுவரெலியா மாவட்ட பகுதியில் உள்ள மக்களுக்கும் கிடைக்க வேண்டும். மலையகத்தில் உள்ளவர்களுக்கு உரிய கல்வியை வழங்க நீங்கள் இதுவரை காலமும் வாக்களித்த தலைவர்கள் விரும்பவில்லை. உங்களை தொடர்ந்தும் லயன் அறைகளில் வைத்துக்கொள்ளவே எதிர்பார்க்கிறார்கள். – என்றார்.




# கல்வியே எமது சமூகத்தை உயர்த்தும்!

## மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவிப்பு

(தலவாக்கலை பி.கேதீஸ்)

எமது சமூகம் தேயிலை தொழிலை மாத்திரம் நம்பி இருக்க கூடாது. தோட்டங்கள் எமது இருப்பிடமாக இருக்கலாம். ஆனால் நாம் இங்கிருந்து கல்வி கற்று வெளியே வர வேண்டும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்டத்தில் யானை சின்னத்தில் போட்டியிடும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்தார்.

நுவரெலியா வெஸ்டடோல் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த மருதபாண்டி ரமேஸ்வரன்,

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கல்விக்கே முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. கல்வியே எமது சமூகத்தை முதன்மை படுத்தும். நமது வளர்ச்சி கல்வியிலேயே தங்கியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் கடந்த ஒன்றரை வருடங்கள் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை நானும் ஜீவன் தொண்டமானும் நுவரெலியா மாவட்டத்துக்குக் கொண்டு வந்தோம். அதில் அதிகமானவை கல்விக்கே முன்னுரிமை கொடுத்துள்ளோம்.

ஒரு சமூகம் தலைநிமிர்ந்து வாழ கல்வியே முதன்மை வகிக்கின்றது. அந்தவகையில் நுவரெலியா மாவட்டத்தில் புதிய பாடசாலைக் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு 300 மில்லியன் நிதியை பெற்றுக் கொடுத்துள்ளோம். பாடசாலைகளுக்கு கணணி,பொட்டோ கொப்பி இயந்திரங்கள், மடி கணணி போன்றவற்றை பெற்றுக்கொடுத்துள்ளோம்.

மலையகத்திலே மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலம் முதல் இன்றுவரை இ.தொ.கா. கல்விக்கே முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. மலையகத்தில் கல்வி கற்ற இளைஞர் யுதிகளுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக 2530 உதவி ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தோம். அது தற்போது வழக்கில் இருக்கிறது அதற்கு ஒரு தீர்வு நிச்சயமாக வரும் காத்திருப்போம்.

அதேபோல் நாங்கள் கூறியது போல தோட்டத் தொழிலாளர்களுக்கு 1350 அடிப்படை சம்பளத்தையும் பெற்றுக் கொடுத்துள்ளோம். கடந்த நாடாளுமன்ற தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக ஐந்து பேர் போட்டியிட்டோம். அதில் இரண்டு பேர் வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றோம்.

எமது கட்சி சார்பாக போட்டியிட்டவர் 48 ஆயிரம் வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். அதே நேரம் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்ட வெளி மாவட்ட நபர் ஒருவர் 28 ஆயிரம் வாக்குகளை பெற்று தோல்வியடைந்தார். இருவருக்குமே நாடாளுமன்றம் செல்ல முடியவில்லை. நுவரெலியா மாவட்ட மக்கள் அப்போது எமது கட்சியில் போட்டியிட்டவரை வெற்றி பெறச் செய்திருந்தால் அவரும் உங்களுக்கு சேவை செய்திருப்பார்.

வெளியிலிருந்து வருபவர்களுக்கு எமது வாக்குகளை வழங்கினால் அவர்கள் எமக்கு ஒன்றும் செய்யபோவதில்லை. இந்த முறை நிறைய சுயேட்சை குழுக்கள் பல நுவரெலியா மாவட்டத்தில் களம் இறக்கப்பட்டுள்ளது.

சில பேருக்கு சுயேட்சை குழு எவ்வாறு விண்ணப்பிப்பது என்பதே தெரியவில்லை. அவர்களின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. நுவரெலியா மாவட்டத்தில் நான்கு சுயேட்சைக் குழுக்களும் பதிவு செய்யப்பட்ட மூன்று கட்சிகளின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய தெரியாதவர்கள் எவ்வாறு மக்களுக்கு சேவை செய்ய போகின்றார்கள். எனவே எமது மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.- என்றார்.





# மன்னார் பிரதான பாலத்தடியில் கடற்கரை பூங்காவுக்கு அடிக்கல்!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் பிரதான பாலத்துக்கு அருகில் நீண்டகாலமாக இராணுவ சோதனை சாவடி அமைத்துக் காணப்பட்ட பகுதியில் கடற்கரை பூங்கா அமைப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு இன்று திங்கட்கிழமை (21) மன்னார் நகர சபை செயலாளர் தலைமையில் இடம்பெற்றது.

நீண்ட நாள்களாக பிரதான பாலத்துக்கு அருகில் இராணுவ சோதனை சாவடி மற்றும் இராணுவ முகாம் வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த இராணுவ சோதனை சாவடி அகற்றப்பட்டு குறித்த காணி மன்னார் நகர சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் மன்னார் மக்கள் ஓய்வு நேரங்களை கழிக்கும் விதமாக கடற்கரை பூங்கா அமைப்பதற்கான நிதி முதற்கட்டமாக நகரசபையால் ஒதுக்கப்பட்ட நிலையில் அதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு மாவட்ட அரச அதிபர் மற்றும் மன்னார் மாவட்ட இராணுவ கட்டளையிடும் தளபதியின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.



முதலில் கடற்கரை பூங்காவுக்கான திரைச்சீலை நீக்கப்பட்டதுடன் நிர்மாண பணி தொடர்பான விவரங்கள் தெளிவுபடுத்தப்பட்டன. அதனைத் தொடர்ந்து மரக்கன்று நடுகையும் இடம் பெற்றது

நிகழ்வில் மன்னார் மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், நகரசபை செயலாளர்கள், நகரசபை ஊழியர்கள், பொலிஸ், ராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டனர்.






# கல்முனை ஸாஹிராவின் "ஸாஹிரா பிரீமியர் லீக் 2024"

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் பவள விழாவை முன்னிட்டு பாடசாலை பழைய மாணவர்கள் சங்கம் ஏற்பாடு செய்துள்ள ஸாஹிரா பிரீமியர் லீக் - 2024 ஆரம்ப நிகழ்வு மற்றும் பாடசாலையின் எதிர் கால பவள விழா தொடர்பாக விளக்க மளிக்கும் ஊடக சந்திப்பு நேற்று (20) பாடசாலை முதல்வர் எம்.எச். ஜாபீர் தலைமையில் பாடசாலை தொழில்நுட்ப மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த ஊடக சந்திப்பில் பாடசாலை அதிபர், பாடசாலை பழைய மாணவர்கள் சங்க செயலாளர் சட்டத்தரணி ஸஹ்பி எச். இஸ்மாயில், உப தலைவர் பொறியி யலாளர் ஏ.ஆர்.எம். பர்ஹான், பொரு ளாளர் தொழிலதிபர் என்.எம். றிஸ்மீர் ஆகியோர் கருத்து வெளியிட்டனர்.

32 அணிகள் பங்குபற்றுகின்ற இந்த ஸாஹிரா பிரீமியர் லீக் - 2024 கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 25, 26, 27 ஆம் திகதிகளில் பகல், இரவு போட்டிகளாக நடைபெறவுள்ளன என்று அறிவித்துள்ளனர்.

பாடசாலைத் தேவைகளுக்கான பஸ் கொள்வனவுக்கு நிதியம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தனியாகவோ அல்லது குழுக்களா கவோ நிதியுதவி வழங்க முடியும் என்று தெரிவித்தனர்.

அதனுடன் இணைந்ததாக பவள விழாவை முன்னிட்டு நடைபெறவுள்ள ஸாஹிரன் நடைப் பயணம் நிகழ்வுக்கு பாடசாலையின் பழைய மாணவர்கள் சகலரும் கலந்து கொள்ள வேண்டும் என்று பகிரங்க அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது.

இந்த நடைப் பயணத்துக்காக வெளி யிடப்படவுள்ள ரி சேட்டை பாடசாலையின் பழைய மாணவர்கள் சகலரும் கொள்வனவு செய்து பாடசாலையின் அபிவிருத்திற்கு பங்களிப்பு செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. பாட சாலை பஸ் கொள்வனவுக்காக ஸஹிரி யன் 90 யினர் 5 லட்சம் ரூபா நிதியை கையளித்தனர். அதற்கான ஆவ ணத்தை இதன்போது கையளித்தனர்.

இந்நிதி கையளிப்பு ஆவணம் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளரும், ஸஹிரியன் 90 உறுப்பினருமான வைத்தியர் சனூஸ் காரியப்பர், இலங்கை வங்கி முகாமை யாளர் முஸ்தகீம் மௌலானா ஆகி யோர் தலைமையிலான குழுவினரால் பாடசாலை பழைய மாணவர்கள் சங்க நிர்வாகிகளிடம் கையளித்து வைக் கப்பட்டது.






# தி.மு.கவின் கடைசி தொண்டன் உள்ளவரை திராவிடத்தை தொட்டுக் கூட பார்க்க முடியாது

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவிப்பு

“தி.மு.கவின் கடைசி தொண்டன் உள்ளவரை, தமிழனையும், தமிழ் நாட்டையும், திராவிடத்தையும் தொட்டுக் கூட பார்க்க முடியாது.”

– இவ்வாறு நத்தத்தில் இன்று நடந்த திருமண விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

“நான் இங்கு மணமக்களை வாழ்த்த மட்டும் வரவில்லை. துணை முதல்வர் ஆனதற்கு உங்களிடம் வாழ்த்துப் பெறவும் வந்துள்ளேன். இது சுயமரியாதை திருமணம். பெரியார், அண்ணா, கருணாநிதி சொன்னதை நான் சொல்லி வருகிறேன். இவர்கள் மூவரும் பெண்கள் முன்னேற்றத்துக்கு பாடுபட்டனர். இந்த வழியில் நமது முதல்வரும் பெண்கள் பொருளாதார சுதந்திரம் அடைய பாடுபட்டு வருகிறார். இலவச பஸ் பயணம் மூலம் இதுவரை 530 கோடி முறை பெண்கள் அரசு பஸ்சில் பயணித்துள்ளனர்.

மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாக திகழ்கிறது நமது திராவிட மாதிரி அரசு. பெண்கள் முன்னேற்றத்துக்கு பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அண்ணா சூட்டிய தமிழ்நாடு என்ற பெயரை ஒருவர் மாற்ற முயற்சித்தார். தமிழக மக்களின் எதிர்ப்பால் மன்னிப்புக் கேட்டார். இப்போது தமிழ்த்தாய் வாழ்த்தில் உள்ள திராவிடத்தை நீக்க வேண்டும் என சிலர் கிளம்பியுள்ளனர். தி.மு.கவின் கடைசி தொண்டன் உள்ளவரை, தமிழனையும், தமிழ்நாட்டையும், திராவிடத்தையும் தொட்டுக்கூட பார்க்க முடியாது. இந்தி திணிப்பை ஒருபோதும் தமிழ்நாடு ஏற்காது.

மக்களவைத் தேர்தல் செமி ஃபைனல் போன்றது. இதில் 40 இற்கு 40 என 100 இற்கு 100 வாங்கி வெற்றி பெற்றோம். எதிர்வரும் சட்டசபை தேர்தல் தான் ஃபைனல். இதில் 200 இற்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற வேண்டும். பெரியாரும் சுயமரியாதையும் போல, அண்ணாவும் தமிழ்நாடும் போல, கருணாநிதியும் தமிழும் போல, ஸ்டாலினும் உழைப்பும் போல மணமக்கள் வாழவேண்டும். உங்களுக்குப் பிறக்கும் குழந்தைக்கு தமிழில் பெயர் வைக்கவேண்டும்.” என்றார்.

# 234 தொகுதியிலும் விரைவில் ம.நீ.ம. கட்சியின் தொழிற்சங்கம்

## பொதுக்குழுவில் தீர்மானம்

தமிழகத்தில் 234 தொகுதிகளிலும் தொழிற்சங்கங்களை ஏற்படுத்த வேண்டும் என்று மக்கள் நீதி மய்யம் கட்சியின் நம்மவர் தொழிற்சங்க பேரவையின் 4 ஆம் ஆண்டு பொதுக்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மக்கள் நீதி மய்யம் கட்சியின் நம்மவர் தொழிற்சங்க பேரவையின் 4 ஆம் ஆண்டு பொதுக்குழு கூட்டம், 5 ஆம் ஆண்டு பேரவை தொடக்க விழா மற்றும் பேரவையின் புதிய அலுவலக திறப்பு விழா ஆகிய முப்பெரும் விழா சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

தொழிற்சங்கப் பேரவையின் புதிய அலுவலகத்தை மக்கள் நீதி மய்யம் கட்சியின் பொதுச்செயலாளர் ஆ. அருணாச்சலம் திறந்து வைத்தார். பின்னர் நடந்த பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவராக கமல்ஹாசன் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. அவரது ஆலோசனையின்படி 234 தொகுதிகளிலும் விரைந்து தொழிற்சங்கங்களை ஏற்படுத்துதல், அரசு மற்றும் தனியார் துறைகளில், துறை வாரியாக தொழிற்சங்கங்களை தொடங்குதல், அமைப்புசாரா தொழிலாளர்களை, தொழில் வாரியாக ஒருங்கிணைத்து தொழிற்சங்கங்களை ஏற்படுத்துதல் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



மேலும், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு உள்ள உரிமைகள், சலுகைகளை பெற்று தருதல், இந்தியாவின் மிகப்பெரிய ரயில்பெட்டி உற்பத்தித் தொழிற்சாலையான சென்னை பெரம்பூர் ஐ.சி.எப்-ல் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு பதில், நிரந்தர பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டும், நவம்பர் 7 ஆம் திகதி கட்சித் தலைவர் கமல்ஹாசனின் பிறந்த நாளை மாநிலம் முழுவதும் சிறப்பாக கொண்டாடுதல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# பாதாள அறையில் சொகுசாக வாழ்ந்த ஹமாஸ் தலைவர் யாஹியா சின்வர்



ஹமாஸ் தீவிரவாத அமைப்பின் தலைவர் யாஹியா சின்வர், பாதாள அறையில் சொகுசாக வாழ்ந்துள்ளார். அவரது மனைவி 27 லட்சம் ரூபா மதிப்புள்ள கைப்பை வைத்துள்ளார்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி பாலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேல் மீது பலமுனை தாக்குதல்களை நடத்தினர். அன்றைய தினம் இஸ்ரேல் பகுதிகளை குறிவைத்து 5,000 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகள் வீசப்பட்டன. சுமார் 6,000 இற்கும் மேற்பட்ட ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேலின் தெற்கு பகுதியில் அத்துமீறி நுழைந்து 119 இடங்களில் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 1,200 இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர். 251 பேர் பணயக்கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டனர்.

இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு ஹமாஸ் தலைவர் யாஹியா சின்வர் மூளையாக செயல்பட்டார். கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த உத்தரவு பிறப்பித்த அவர் அன்றைய தினம் தனது குடும்பத்தினருடன் பாதாள அறையில் பதுங்கி உள்ளார்.

இதுதொடர்பான வீடியோவை இஸ்ரேல் இராணுவம் வெளியிட்டு உள்ளது. இதன் பின்னணி குறித்து இஸ்ரேல் இராணுவ வட்டாரங்கள் கூறுகையில், ஹமாஸ் தலைவர் யாஹியா சின்வர் (வயது 61) கடந்த 2011 ஆம் ஆண்டில் தன்னைவிட 12 வயது குறைந்த சமர் முகமது அபு ஜாமர் (வயது 49) என்பவரை திருமணம் செய்தார். அவர்களுக்கு 3 குழந்தைகள் உள்ளனர்.

யாஹியா சின்வரின் வீடு காசாவின் கான் யூனிஸ் நகரில் இருந்தது. அவரது வீட்டுக்கு அடியில் பல அடி ஆழத்தில் பாதாள அறை கட்டப்பட்டு இருந்தது. அந்த பாதாள அறைக்கு செல்ல மிக நீளமான சுரங்கப் பாதை அமைக்கப்பட்டு இருந்தது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த உத்தரவிட்ட யாஹியா சின்வர், தனது மனைவி, குழந்தைகளுடன் பாதாள அறைக்கு சென்று சொகுசாக வாழ்ந்துள்ளார். அவர் தனது குடும்பத்தினருடன் சுரங்கப் பாதையை கடந்து செல்லும் வீடியோ இப்போது கிடைத்திருக்கிறது.


காசா அகதிகளுக்காக ஐ.நா. சபை சார்பில் இலவசமாக தானியங்கள் வழங்கப்படுகிறது. இந்த தானியங்கள் மற்றும் தொலைக்காட்சி பெட்டி, தொலைபேசி என சகல வசதிகளுடன் யாஹியா சின்வர் பாதாள அறையில் வாழ்ந்துள்ளார்.

யாஹியா சின்வரின் மனைவி ஆடம்பர பிரியை ஆவார். அவர் பிரான்ஸின் ஹெர்மஸ் நிறுவனத்தின் பிர்கின் கைப்பையை பாதாள அறைக்கு எடுத்து சென்றுள்ளார். இதன் விலை ரூ.27 லட்சமாகும். மேலும் பாதாள அறையில் கட்டு கட்டாக பணமும் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது.

இஸ்ரேல் இராணுவ தாக்குதல்களில் ஹமாஸின் சுரங்கப்பாதைகள் தரைமட்டமாகின. இதன்காரணமாக பாதாள அறையில் இருந்து யாஹியா சின்வர் அண்மையில் வெளியேறி உள்ளார். கடந்த 16 ஆம் திகதி இஸ்ரேலின் பயிற்சி இராணுவ வீரர்கள், காசாவின் ரஃபா பகுதியில் நடத்திய தாக்குதலில் அவர் பரிதாபமாக உயிரிழந்தார். இவ்வாறு இஸ்ரேல் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

காசாவை சேர்ந்த ஒருவர் கூறும் போது,

“இஸ்ரேல் இராணுவ தாக்குதலில் காசா பகுதி மக்கள் கொத்து கொத்தாக உயிரிழந்து வருகின்றனர். ஆனால் யாஹியா சின்வர் தனது குடும்பத்தினருடன் பாதாள அறையில் சொகுசாக வாழ்ந்துள்ளார். இதுதான் ஹமாஸ் தலைவர்களின் உண்மையான முகம். வேண்டுமென்றே போரை தொடங்கி காசாவின் அமைதியை ஹமாஸ் தீவிரவாதிகள் சீர்குலைத்துவிட்டனர். இப்போது காசா நரகமாக காட்சியளிக்கிறது.” என்று தெரிவித்தார்.



# உணவகத்தில் உணவு தயாரித்துக் கொடுத்து பிரசாரத்தில் ஈடுபட்டார் டொனால்ட் ட்ரம்ப்

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பென்சில்வேனியா மாகாணத்தில் உள்ள உணவகமொன்றில் பிரெஞ்ச் பிரைஸ் தாயரித்துக் கொடுத்து பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 5 ஆம் திகதி நடைபெற உள்ளது.

இதில் ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் கமலா ஹாரிஸ் மற்றும் குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுகின்றனர்.

இருவரும் தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறனர்.

பக்கங்கள் 02

கனடா முரசு

திங்கட்கிழமை 21/10/2024

## கனடாவின் மார்க்கம் பகுதியில் வாகனங்கள் மீது கற்கள் வீச்சு

கனடாவில் மார்க்கம் பகுதியில் பயணம் செய்த வாகனங்கள் மீது கற்கள் வீசி எறியப்பட்டுள்ளன.

பயணம் செய்து கொண்டிருந்த வாகனங்கள் மீது இவ்வாறு கற்கள் வீசி எறியப்பட்

02

# ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலைக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை

## இந்திய தூதுவர் சஞ்சய் வர்மா தெரிவிப்பு

**கனடாவில் கொல்லப்பட்ட காலிஸ்தான் அமைப்பின் தலைவர் நிஜ்ஜார் கொலைக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என இந்திய தூதரான சஞ்சய் வர்மா கனடா செய்தி தொலைக்காட்சிக்கு தெரிவித்துள்ளார்.**

**கனடாவில் வசித்து வந்த சீக்கிய பிரிவினைவாத காலிஸ்தான் அமைப்பின் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஆண்டு கொலை செய்யப்பட்டார். இதில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சுமத்திய நிலையில் இரு நாடுகளின் உறவில் விரிசல் ஏற்பட்டது.**

இதுதொடர்பாக, இந்திய தூதரக அதிகாரிகளிடம் விசாரணை நடத்தப்போவதாக கனடா தெரிவித்ததை அடுத்து, . கனடாவுக்கான இந்திய தூதரை திரும்பப்பெற மத்திய அரசு முடிவு செய்தது.

அதோடு இந்தியாவில் கனடா அதிகாரிகள் 6 பேரை வெளியேற உத்தரவிட்டதை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையில் பனிப்போர் நீடித்து வருகின்றது. இதற்கிடையே, நிஜ்ஜார் கொலையில் இந்திய அரசு அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பதற்கான வலுவான ஆதாரங்கள் இல்லை என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறியிருந்தார்.



இந்நிலையில், இந்திய தூதரான சஞ்சய் வர்மா கனடா செய்தி தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் ,

நிஜ்ஜார் கொலை தொடர்பாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்த குற்றச்சாட்டுகள் உறுதியான ஆதாரத்தின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டதல்ல. கனடா உளவுத்துறை தெரிவித்த தகவலின் படியே அந்தக் குற்றச்சாட்டை அவர் கூறியுள்ளார்.

இதை அவரே சமீபத்தில் ஒப்புக் கொண்டார். அவரின் குற்றச்சாட்டு அரசியல் உள்நோக்கம் கொண்டது. இந்தியா, கனடா இடையிலான உறவை அவர் தகர்த்துள்ளார். நிஜ்ஜார் கொலைக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என தெரிவித்தார்.

# பெண் துஷ்பிரயோகம் கனடாவில் 5 பேர் கைது

இளம் யுவதி ஒருவரை பாலியல் ரீதியாக துன்புறுத்திய ஐந்து பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கனடாவின் வோகன் பகுதியைச் சேர்ந்த நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி அதிகாலை வேளையில் நோர்வுட் மற்றும் ஜீன் வீதிகளுக்கு அருகாமையில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

முன்னர் அறிமுகம் இல்லாத பெண்ணொருவரை இந்த ஐந்து பேரும் ஒரு இடத்திற்கு அழைத்துச் சென்று துஷ்பிரயோகம் செய்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் அனைவரும் பதின்ம வயதுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

15 முதல் 18 வயதுடைய 5 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் யோர்க் பிராந்திய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.






# கனடா துப்பாக்கிச் சூட்டில் பெண் பலி, மூவர் காயம்

கனடாவில் இடம் பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவம் ஒன்றில் பெண் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் 3 பேர் காயமடைந்துள்ளனர்.

ருதர்போர்ட் மற்றும் செல்பி வீதிகளுக்கு அருகாமையில் இடம் பெற்றுள்ளது. வர்த்தக நிலையம் ஒன்றுக்கு அருகாமையில் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது.

பீல் பிராந்திய பொலிசார் இந்த தகவலை வெளியிட்டுள்ளனர்.

ஆறு பேர் ஒரு வாகனத்தில் இருந்த போது அருகாமையில் வந்த மற்றுமொரு வாகனத்தில் இருந்தவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்தில் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் மேலும் இரண்டு பெண்களும், வாகனத்தின் சாரதியும் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.





# 87 ஆவது வயதில் பட்டம் பெற்ற பெண்ணுக்கு குவியும் பாராட்டுக்கள்

தனது 87 ஆம் வயதில் பட்ட கற்கை நெறியை பூர்த்தி செய்து பட்டத்தை பெற்றுக் மூதாட்டிக்கு பலரும் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

ஒன்றாரியோ மாகாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு சாதனை படைத்துள்ளார்.

யோர்க் பல்கலைக்கழகத்தில் இந்த பெண் பட்டம் பெற்றுக் கொண்டுள்ளார் ஹோர்டன்ஸ் எக்லின் என்ற பெண்ணே இவ்வாறு பட்டம் பெற்றுக் கொண்டுள்ளார்.

யோர்க் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா இந்த வாரம் நடைபெற்றது. சமய விவகார கற்களுக்காக சிறப்பு பட்டத்தை பெற்றுக் கொண்டதாக எக்லின் தெரிவிக்கின்றார்.

தமது இந்த அடைவிற்காக பலரும் வாழ்த்தியதாகவும் தான் இந்த பட்டத்தையே வென்றெடுத்தமைக்காக பெருமிதம் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2022 ஆண்டு எக்லின் ஏற்கனவே கலைத்துறையில் பட்டம் பெற்றுக் கொண்டுள்ளார் என்பதுடன் அப்பொழுது அவருக்கு வயது 85 என்பது குறிப்பிடத்தக்கது.

## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஒன்றாரியோ மாகாண பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அதிவேக நெடுஞ்சாலையில் பயணம் செய்து கொண்டிருந்த வாகனங்கள் மீது இவ்வாறு கற்கள் வீசி எறியப்பட்டுள்ளன.

இவ்வாறான ஒன்பது சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதம் இந்த தாக்குதல் சம்பவங்கள் அதிக அளவில் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதல் சம்பவங்களினால் இரண்டு பேர் படுகாயம் அடைந்ததாகவும் சில வாகனங்கள் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அனைத்து தாக்குதல் சம்பவங்களையும் ஒரே சந்தேக நபர்கள் மேற்கொண்டு இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் தெரிந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

